செ.வெ.எண். 231/2009(செமதொஅ) நாள் : 03.08.2009.

**கிராமப் புறங்களில் விளம்பர பலகைகள் அமைப்பதற்கு உரிமம் பெற விண்ணப்ப படிவங்களை பெற உதவி இயக்குநரை(ஊராட்சிகள்) அணுகவும் - மாவட்ட ஆட்சியர்(பொ) தகவல்.**

தமிழ்நாட்டிலுள்ள கிராமப் பகுதிகளில் விளம்பர பலகைகள் நிறுவ அனுமதி வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கி அரசு உத்தரவிட்டுள்ளது. அதற்கான உத்தரவு 18.05.2009ல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவின்படி, மாவட்ட ஆட்சித்தலைவர் கிராமப் பகுதிகளிலும் சாலை ஒரங்களிலும் விளம்பர பலகைகள் அமைக்க அனுமதி வழங்குவார். அரசு புறம்போக்கு நிலங்களில் விளம்பர பலகைகள் நிறுவ நிர்ணயிக்கப்பட்ட வாடகை வசூலிக்கப்படும். விளம்பர பலகைகள் நிறுவ உரிம கட்டணம் மற்றும் விளம்பரங்களுக்கான அரையாண்டு வரி விதிக்கப்படும். மேலும் விளம்பரங்கள் அனைத்திற்கும் விளம்பர வரி செலுத்தப்பட வேண்டும். விளம்பரம் எனப்படுவது தனியார் அல்லது பொது நிலங்கள், கட்டடங்கள், மரங்கள், கட்டமைப்புகள் அல்லது வேறு ஆதாரங்களுடன் தட்டியில் போர்டுகள் மற்றும் இதர வகையில் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ பொதுமக்களின் பார்வைக்குள்ள அனைத்து செய்திகளும் அடங்கும்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் விளம்பர பலகைகளுக்கான உரிமம் பெறுவதற்கான விண்ணப்ப படிவம் மற்றும் இதர நிபந்தனைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்திலுள்ள உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர்(பொ) திரு. அ.நம்பிராசன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்.